ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சங்ககால இயற்கைப்புணர்ச்சியும் நவீனகாலத் தொடர்ச்சியும்

அனிஷா.சி
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
பதிவு எண் : 20113114022048
தமிழ்த்துறை, தமிழாய்வுமையம்,
நேசமணி நினைவு கிறிஸ்தவக்கல்லூரி
மார்த்தாண்டம்-629165

முனைவர். யோ. நே. ஆட்லின் பியூலா,
நெறியாளர், உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, தமிழாய்வுமையம்,
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி
மார்த்தாண்டம் – 629165
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி - 627012

ஆய்வுச் சுருக்கம்:

சங்ககால இயற்கைப்புணர்ச்சியும் நவீனகாலத்தொடர்ச்சியும்' என்ற தலைப்பில் அமைந்த இவ் ஆய்வு கட்டுரையின் முன்னுரையில் ஆய்விற்கான நோக்கமும் இயற்கைப்புணர்ச்சி குறித்த தெளிவான விளக்கமும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதோடு இயற்கைப்புணர்ச்சியையொட்டி நிகழும் செயல்களை முதல் சந்திப்பு, குழப்பம், தெளிவுபடுதல், குறிப்பால் அறிதல் ஆகிய நான்கு குறுந்தலைப்புகளை மையப்படுத்தி விளக்கமாக இவ்வாய்வுக் கட்டுரை விளக்குகிறது.

சங்க இலக்கியஅக நூல்களில் களவு பற்றிய செய்திகளே அதிகமாக இடம் பெற்றுள்ளன. களவு வாழ்வின் முந்தைய நிகழ்வே இயற்கைப் புணர்ச்சி எனப்படும்.எட்டுத்தொகை நூல்களில் காணப்படும் இயற்கைப்புணர்ச்சி குறித்த செய்திகளை நவீன காலத்தோடு ஒப்பிட்டு நோக்குவதையே இவ்வாய்வின் நோக்கமாகக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது. இயற்கைப்புணர்ச்சியானது ஒரு திணைக்கு மட்டும் உரியதன்று. அது ஐந்திணைகளுக்கும் பொதுவானது. ஆகவே களவும், கற்பும் எல்லா நிலத்திற்கும் பொதுவானதாகவே கருதப்படுகிறது. இயற்கைப்புணர்ச்சியானது உள்ளப்புணர்ச்சி, மெய்யுறுப்புணர்ச்சி என இருவிதங்களில் அமைகிறது. தலைவனும் தலைவியும் உள்ளத்தால் ஒன்றுபட்டு உண்மையாக அன்பு கொண்டு ஒழுகுதல் உள்ளப்புணர்ச்சி என்றும், தலைவன் தலைவியைத் தழுவ எண்ணி தலைவியை உடன்படவைப்பது மெய்யுறுப் புணர்ச்சி என்றும் கூறப்படுகிறது.

முன்னுரை:

சங்ககால மக்கள் காதலையும், வீரத்தையும் இரு கண்களெனப் போற்றினர். அதில் காதல் என்பது அன்பு கலந்த அக வாழ்க்கையையும், வீரம் என்பது மக்களின் புற வாழ்க்கையையும் குறித்தது. இப்படிப்பட்ட வாழ்க்கையில் அன்பு கலந்த காதல் வாழ்க்கையின் ஆரம்பகட்ட நிகழ்வாக இயற்கைப்புணர்ச்சி அமைந்துள்ளது. நமது இலக்கண நூலாகிய தொல்காப்பியம் இதற்கென்று இலக்கணம் வகுத்துள்ளது. அன்பின் ஐந்திணைகளில் வாழ்ந்த மக்களின் வாழ்வியலை விளக்குகின்ற சங்க இலக்கியங்கள் இதற்கு சான்று பகருகின்றன. அந்த வகையில் தொல்காப்பிய நூற்பாக்களின் அடிப்படையில், சங்க இலக்கியச் சான்றுகளோடு இயற்கை புணர்ச்சியை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

இயற்கைப்புணர்ச்சி:

இயற்கைப்புணர்ச்சி என்பது முன்பு அறிமுகம் இல்லாத தலைவனும் தலைவியும் ஓரிடத்தில் எதிர்பாராத விதமாக சந்தித்து கூடி மகிழ்ந்து அன்பு காட்டுவதே ஆகும். இது

*தெய்வத்தாலோ, தலைவியின் தனிப்பட்ட விருப்பத்தாலோ நிகழலாம். தெய்வத்தால் நிகழ்வதென்பது. தலைவியின்மீது எவ்வித நாட்டமுமின்றி திகழும் தலைவன் தெய்வம் கூட்டு விக்கத் தலைவியைக் கூடுவான். இதை ஊழ்வினைப் பயனால் நிகழ்ந்ததெனவும் கூறுவர், தலைவியால் நிகழும் இயற்கைப்புணர்ச்சியானது*

- ❖ *தலைவன் தன் விருப்பத்தை தலைவியிடம் கூறல்*
- ❖ *தலைவனது விருப்பத்திற்கு தலைவி முதலில் மறுப்புக் கூறல்*
- ❖ *பின்னர் தலைவனது விருப்பத்தை ஏற்று உடன் படல்*
- ❖ *தலைவனும் தலைவியும் கூடி மகிழ்தல் என்ற நான்கு நிலைகளில் நடைபெறும்.*

*நமக்கு கிடைத்த முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் மனிதனது வாழ்விற்கு தேவையான விதிகளை வகுக்க தவறவில்லை. தொல்காப்பியத்தில் இயற்கைப்புணர்ச்சி குறித்த செய்திகள் பொருளதிகாரத்தின் களவியலில் கூறப்பட்டுள்ளது. இதில் (காட்சியானது) முதல் சந்திப்பானாது தலைவன் தலைவியின் ஊழ்வினை பயனால் நிகழ்வதெனவும் இது பிறவிதோறும் தொடரும் எனவும் கூறப்படுகிறது. தலைவன் தலைவியை சந்திக்கும் போது ஐயம் தோன்றும். ஆனால் சில குறிப்புகளால் இவள் பெண் தான் என உணர்ந்து கொள்வான். அவர்கள் பேச நினைப்பதை கண்கள் மூலமாகவே பேசிக் கொள்வார்கள். அதற்கு பின்பு ஒருவரை ஒருவர் நினைத்துக் கொண்டிருத்தல், ஏக்கத்தால் உடல் மெலிதல், காணும் பொருள்களிலெல்லாம் காதலர் நினைவில் வருதல், தன்னை மறத்தல், காதல் நிறைவேறாத பொழுது சாகத் துணிதல் முதலானவையும் நிகழும்.*

*பின்னர் காதலியிடம் பேச்சுக்கொடுத்து தன் சொல்லுக்கு அவளை கட்டுப்பட வைத்தல், தலைவி பிரிந்தால் தனக்கு ஏற்படும் துயர் உரைத்தல் முதலியவையும் தலைவியின் அழகை பொய்யாக பாராட்டல், தலைவியை தழுவிக் கொள்ள முயலுதல், தலைவி தடுத்தல், அவள் மனமிரங்க வேண்டி தலைவன் கெஞ்சுதல், தலைவன் நிலை கண்டிரங்கி கூடுதல், கூடி மகிழ்ந்தபின் உன்னைப் பிரியேன் என்றல் முதலியவையும் தலைவி தன் தோழியர் கூட்டத்தோடு சென்று சேர்ந்தபின் பாங்கனின் உதவியாலும் தலைவியின் தோழியின் உதவியாலும் தலைவியை கூடுதல் முதலியவையும் நிகழும். இவற்றைப் பின்பற்றியே சங்க இலக்கிய இயற்கைப்புணர்ச்சியும் இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.*

*காதல் (இயற்கைப்புணர்ச்சி) என்பதற்கு கென்னத்து வாக்கர் தனது பாலுடலியல் நூலில் கூறும் கருத்தை வ.சுப. மாணிக்கம் தனது தமிழ்க்காதல் நூலில் கூறும் போது "பாலுணர்வு பற்றி ஒரு பொருத்தமான கொள்கையை நாம் கூறுவதற்கியலவில்லை என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். பெண்ணொருத்தியைக் காண்கின்றான்; அவள் மொழியைக் கேட்கின்றான்; அவள் மணத்தை மோக்கின்றான். அவள் மெய்யைத் தீண்டுகின்றான். கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் போது உள்ளம் காமத்தின் கொள்கலம் ஆகின்றது. உடம்பில் சில மாற்றங்கள் நிகழ்கின்றன. இவையெல்லாம் புணர்ச்சியில் போய் முடிவடையும் காதல் புறநிலைகளைக் கண்டு கூறுமளவே அறிவியல் செய்யக்கூடியது. அதன் தோற்றத்தை இது தெளிவாக்குமா? இல்லவே இல்லை" (வ.சுப.மாணிக்கம்; தமிழ்க்காதல்: ப:39)என்று குறிப்பிட்டுள்ளார். பொதுவாக இயற்கைப்புணர்ச்சி எல்லோரிடமும் தோன்றுவதில்லை. தினந்தோறும் எத்தனையோ இளவயது ஆண்களும் பெண்களும் சந்திக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. இருப்பினும் குறிப்பிட்ட ஒரு ஆணின் மீது பெண்ணிற்கும், ஒரு பெண்ணின் மீது ஆணிற்கும் இவ்ஈர்ப்பு ஏற்படுகிறது. இதுவே காதல் என்ற பெயரில் அறியப் படுகிறது. இந்த ஈர்ப்பு ஏற்படுவதற்கான காரணங்கள் இன்னும் சரியாக புலப்படவில்லை.*

*முதல் சந்திப்பு*

*முன்னர் அறிமுகம் இல்லாத ஆணும் பெண்ணும் சந்தித்துக் கொள்ளும் நிகழ்வே முதல் சந்திப்பாகும். இந்த முதல்சந்திப்பானது நல்வினை பயனாகவோ தீவினை காரணமாகவோ நிகழலாம். நல்வினையில் ஏற்படும் சந்திப்பு ஆணையும் பெண்ணையும் கற்பு வாழ்விற்கேற்றதான திருமணம் என்ற உறவில் இணைத்து வைக்கும். ஆனால் தீவினையால் ஏற்படும் சந்திப்பானது திருமணம் என்ற பந்தத்தை அளிக்காமல் ஆணையும் பெண்ணையும் பிரித்து வைக்கும். சங்க இலக்கியத்தைப் பொறுத்த மட்டில் இளவயது நிரம்பிய தலைவி தாயின் கட்டளைப்படி தன் தோழியருடன் தினைப்புனம் காக்கச் செல்கிறாள். அங்கு தினைக்கதிர்களைக்*

கவரவரும் கிளிக்கூட்டத்தை தட்டையைப் பயன்படுத்தி விரட்டியடிக்கிறாள். பின்னர் அருகிலுள்ள அருவியில் குளித்தும் மலர்களைக் கொய்து அவற்றைத் தொடுத்தும் மரநிழலில் அமர்ந்திருக்கிறாள். அவ்வேளையில் தன் வேட்டைநாயோடு இளவயது நிரம்பிய தலைவன் மலையெல்லாம் சுற்றித்திரிந்து அங்கு வந்து சேர்கிறான். தன் அம்பால் புண்பட்ட யானை இந்தபக்கம் வந்ததா? நீங்கள் அதைப்பார்த்தீர்களா? என இளம் பெண்களைப் பார்த்து கேட்கிறான். அவனைப்பார்த்த பெண்கள் அதற்கு பதில் கூறாமல் வெட்கத்தால் தலைகுனிந்தனர். அவர்களின் வாய் பேசுவதற்கு முன்பே கண்கள் நட்புக் கொண்டன. இதனால்தான் காதலின் பிறப்பிடமாக கண் கூறப்படுகிறது. இதனை ‘‘கண்தர வந்த காம ஒள் எரி‘‘ (குறுந்-305) என்று குப்பைக்கோழியார், காமத்தின் பிறப்பிடம் கண் என சுட்டுகிறார்

"இவன்இவள் ஐம்பால் பற்றவும், இவள்இவன்
புன்தலை ஓரி வாங்குநள் பரியவும்,
காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது,
ஏதில் சிறு செரு உறுப மன்னோ;
நல்லைமன் றம்ம பாலே மெல்இயல்
துணைமலர்ப் பிணையல் அன்னஇவர்
மணம்மகிழ் இயற்கை காட்டி யோயே".

(குறுந் -229)

இந்த பாடலடிகளில் காதல் முதற்சந்திப்பில் தான் தோன்றுகிறது என கூறமுடியாது. சிறுவயதுமுதலே ஒன்றாக வளர்ந்து, தலைமுடியைப் பிடித்துச் சண்டையிட்ட இருவர்.இளவயது எய்தியதும் தீடீரென அன்பால் இணைந்து மலர்களால் இணைத்து கட்டிய மாலைபோல் ஒருவரையொருவர் தழுவி உடன்போக்கு மேற்கொண்டனர் என்ற செய்தியை மோதாசனார் குறிப்பிட்டுள்ளார். இந்த கருத்தை மையப்படுத்தும் போது (காதல்) இயற்கைப்புணர்ச்சி ஆண்பெண்ணிடையே முதற்சந்திப்பில் மட்டுமல்லாது பல நிலைகளில் நிகழ்தலை உய்த்துணரமுடிகிறது.

நவீனகால இயற்கைப்புணர்ச்சியை நோக்கும்போது சங்க இலக்கியத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டு முதற்சந்திப்பானது பேருந்துநிலையங்களில், பள்ளிகளில், கல்லூரிகளில், பணிபுரியும் இடங்களில் என பல நிலைகளில் நிகழ்கிறது. இந்த சந்திப்புகள் நல்வினை பயனாகத்தான் ஏற்படுகிறது என்று கூற முடியாது. படிக்கும் காலங்களில் நண்பராகப்பழகி பின் அன்பால் பிணைக்கப்படும் இயற்கைப்புணர்ச்சி இக்காலத்தில் தனித்துவம் பெறுகிறது. இதையும் தாண்டி நவீன வளர்ச்சியின் விளைவாக புலன் இணைப்பு (Whatsapp) மற்றும் முகநூல் இணைப்பு (face Book) ஆகியவற்றின் வாயிலாக முதற்சந்திப்புகள் ஏற்பட்டு திருமணம் என்ற நல்வினையில் முடியும் காதல்களும் சிறப்பிடம் பெறுகின்றன. ஆனால் சிலரது சந்திப்புகள் தாங்கள் செல்லும் இடத்திற்கு இடம் மாறி வருதலையும் கண்டுணர முடிகிறது.

குழப்பம்

ஆண்-பெண் சந்திப்பின் அடுத்த நிலை குழப்பம். சங்க இலக்கியத்தில் ஒரு தலைவன் தலைவியை சந்தித்த இடமும், அவளது தோற்றமும் அவனிடையே குழப்பத்தை உண்டு பண்ணுகிறது. ஆனால் பெண்கள் குழப்பம் கொண்டதாக எந்த இடத்திலும் குறிப்புகள் இடம்பெறவில்லை. ஒரு ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் சந்திக்கும்பொழுது இவள் பெண்ணல்ல பேரழகு தெய்வம் என்ற எண்ணம் உருவாகி குழப்பம் தோன்றுதல் உயர்வானதே என்பது தொல்காப்பியர்தம் கருத்து. இதனை

‘‘சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப
இழிந்துழி இழிவே சுட்டலான’’

(தொல்: பொருள்: 1040)

என்ற நூற்பா புலப்படுத்துகின்றது. அழகிய அணிகலன்களை அணிந்த ஒருபெண் தன் தோழியரோடு சேர்ந்து விளையாடாமல் கடற்கரைச் சோலையின் ஒருபக்கத்தில் தனியாக நின்று கொண்டிருக்கிறாள். அவளைக் கண்ட இளவயது நிரம்பிய ஆண்மகனுக்கு அவள் நிற்கும் தோற்றப்பொலிவு அவன் மனதில் குழப்பத்தை உண்டுபண்ணுகிறது. ஆகையால் அவள் அருகில் சென்று இங்கு தனியாக நிற்கும் நீ யார் ?. இந்த பெரிய கடற்பரப்பில் விரும்பி வசிக்கும் கடல் தெய்வமோ ,அல்லது உப்பங்கழியின் அருகில் நின்றவள் நீதானோ? என தன்மனதிலிருக்கும் குழப்பத்தைப் போக்கிக் கொள்ளும் நோக்கோடு வினா எழுப்புகிறான். இதனை

"ஒள்இழை மகளிரொடு ஓரையும் ஆடாய்,
வள் இதழ் நெய்தற் தொடலையும் புனையாம்,
விரிபூங் கானல் ஒருசிறை நின்றோய் !
யாரை யோநின் தொழுதனெம் வினவுதும்;
கண்டோர் தண்டா நலத்தை தெண்திரைப்
பெருங்கடல் பரப்பின் அமர்ந்து உறை அணங்கோ?
இருங்கழி மருங்கு நிலைபெற் றனையோ?

(நற்றிணை: 155:1-7)

என்றப்பாடல் புலப்படுத்துகின்றது. சங்க இலக்கியத்தில் இடம் பெறுவதிலிருந்து முற்றிலும் வேறுபட்டே நவீனகாலத்தில் இந்த குழப்பம் ஏற்படுகிது. நவீனகால இயற்கைப் புணர்ச்சியில் (காதலில்) சந்தித்த ஆண் - பெண் இருவரின் கண்களும், காட்சியன் அடுத்தகட்டமான குழப்பத்தில் தான் சந்தித்த ஆண் வசதி படைத்தவனா? அல்லது பெண் வசதிவாய்ப்புகள் நிரம்பியவளா? என அவர்களது கழுத்து, கையில் அணிந்திருக்கும் அணிகலன் மீதாகவே பாய்கின்றன. அதையும்தாண்டி சிலரது குழப்பங்கள் திருமணம் ஆனவரா? இல்லையா? என்ற மனநிலையில் இருப்பதையும் காண முடிகின்றது.

தெளிவுபடுதல்

தலைவன் தலைவியை சந்தித்தபோது இவள் தெய்வப்பெண்ணோ? அல்லது மானிடப்பெண்ணோ? என்ற குழப்பம் ஏற்பட்டு , அந்த குழப்பத்திலிருந்து இவள் மானிடப் பெண்தான் என்ற தெளிவு ஏற்படுகிறது. இதனையே சங்க இலக்கியம் துணிவு என்ற சொல்லால் சுட்டுகிறது. தலைவனது குழப்பம் நீங்கி தெளிவு ஏற்பட சில அடையாளங்கள் துணைபுரிவதாகவும் தொல்காப்பியம் சுட்டுகிறது . அவை,

- ❖ தலைவியின் கூந்தலில் சூடப்பட்ட மலர்களை வண்டுகள் மொய்த்தல்.
- ❖ தலைவி தன் உடலில் அணிந்திருக்கும் அணிகலன்களின் அமைப்பு
- ❖ தலைவியின் தோளில் பச்சை குத்தி இருத்தல்.
- ❖ தலைவி சூடியிருந்த மலர்கள் வாடியிருத்தல்.
- ❖ இமைக்கின்ற கண்கள்
- ❖ பாதம் தரையில்பட நடந்து வருதல்
- ❖ ஆண்களைக் கண்டு அஞ்சுதல்

ஆகிய 7 செயல்களும் தலைவனது குழப்பத்தை நீக்க துணைபுரிகின்றன. அதோடு நற்றிணைப் பாடலில் பராயனார் கூறும்போது தலைவியின் கூரிய பற்களிலிருந்து தோன்றிய புன்சிரிப்பும், அவளது இமைக்கின்ற மைபூசிய கண்களும் இவள் மானிடப்பெண்தான் என்பதை உறுதி செய்கிறது என்கிறார். இதனை,

"முள்எயிற்று முறுவல் திறந்தன
பல் இதழ் உண்கணும் பரந்தவால் பனியே".

(நற்றிணை : 155:9, 10)

என்றப் பாடல் புலப்படுத்துகின்றது. நவீனகாலத்திலும் ஆண்- பெண்ணிடையே வசதி வாய்ப்புகள் நிரம்பியவரா அல்லது ஏழ்மைநிலையை உடையவரா? என்ற குழப்பத்தை தெளிவுபடுத்த அவர்கள் அணிந்திருக்கும் அணிகலன்களும், மணம் முடிந்தவர் என்பதை உறுதிபடுத்த மங்கல நாண்களும் துணைபுரிகின்றன. இதற்கு அடுத்த நிலையில் புலன இணைப்பு மற்றும் முகநூல் வாயிலாக ஏற்படும் இயற்கைப்புணர்ச்சியில் இறுதிவரை தெளிவுபெறாமல் ஏமாந்துபோகும் நிலமையையும் காணமுடிகிறது.

குறிப்பால் அறிதல்:

தலைவன் தலைவியைப் பார்த்தல், குழப்பமடைதல், மானிடப்பெண்தான் எனத்துணிவு கொள்ளல் ஆகிய நிலைகளுக்குப் பின்பு தலைவி தன்னை விரும்புகிறாளா என்பதை அறிந்து கொள்வதற்காக தலைவன் தலைவியை எதிர்நோக்கி இருப்பான். அவ்வேளையில் தலைவி ஏதேனும் ஒரு குறிப்பை வெளிப்படுத்த தலைவன் தலைவியின் மனக்குறிப்பை அறிந்து கொள்ளுவான். இதைத்தான் குறிப்பறிதல் என தொல்காப்பியம் சுட்டுகிறது.

*"குறிப்பே குறித்தது கொள்ளும் ஆயின்*
*ஆங்கு அவை நிகழும் என்மனார் புலவர்" (தொல் பொருள் - 1043)*

*ஒருவர் பார்க்கும் பார்வையின் பொருள், பார்ப்பவரது காதல் குறிப்பை பார்க்கப்படுபவர் புரிந்து கொண்டால் பார்வை பரிமாற்றம் நடந்து கொண்டே இருக்கும் என்கிறார் தொல்காப்பியர். இறுதியாக தலைவி தலைவன் மீது கொண்ட விருப்பத்தை தலைவன் புரிந்து கொள்ளுமாறு கண்கள் வாயிலாக வெளிப்படுத்துவாள். அதனை தலைவன் புரிந்து கொண்டு செயல்படும் நிலையே குறிப்பால் அறிதல் எனப்படுகிறது.*

*நவீனகாலத்திலும் கண்களின் வாயிலாக தங்கள் உள்ளக் குறிப்புகளை வெளிப்படுத்தும் ஆண்களையும் பெண்களையும் பொது இடங்களில் காண முடிகிறது. இதைத் தவிர புலன இணைப்புகளின் வாயிலாக குறுஞ்செய்திகள் அனுப்பியும் தற்கால மக்கள் உள்ளக் குறிப்பினை வெளிப்படுத்துகின்றனர். தற்கால இயற்கைப்புணர்ச்சியில் முதல் சந்திப்பு, குழப்பம், தெளிவுபடுதல், குறிப்பால் அறிதல் என்ற நான்கு நிலைகளும் சங்க இலக்கிய காலத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டு நேரில் கண்டு வளர்வதை விட செல்லிடப்பேசியின் வாயிலாகவே வளர்ச்சி அடைகிறது என்பதில் ஐயமில்லை.*

*தொகுப்புரை:*

*"சங்ககால இயற்கைப்புணர்ச்சியும் நவீனகாலத் தொடர்ச்சியும்" என்ற தலைப்பில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வில் முதல் சந்திப்பு, குழப்பம், தெளிவுபடுதல், குறிப்பால் அறிதல் என்ற நான்கு நிலைகளிலும் சங்ககால மக்களிலிருந்து நவீனகால மக்களின் வாழ்க்கைமுறை எத்தகைய மாற்றத்தைப் பெற்றிருக்கிறது என்பதை உணரமுடிகிறது. சங்ககால இயற்கைப்புணர்ச்சியோடு நவீன கால மக்களின் இயற்கைப்புணர்ச்சி (காதல் வாழ்வு) ஒத்துப்போகாமல் முற்றிலும் மாறுபட்டிருத்தலை இவ்வாய்வு தெளிவுபடுத்துகிறது.*

*துணைநூற்பட்டியல்:*


*1. வ.சுப. மாணிக்கம்* — *தமிழ்க்காதல், முதல்பதிப்பு : மே 2002*
*மெய்யப்பன் பதிப்பகம்*
*53, புதுத்தெரு,*
*சிதம்பரம் – 608001*

*2. சா.வே.சுப்பிரமணியன்* — *சங்க இலக்கியம்*
*எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும்*
*(குறுந்தொகை) தொகுதி- 1, முதற்பதிப்பு 2010*
*மணிவாசகர் பதிப்பகம்.*
*31, சிங்கார் தெரு, பாரிநிலையம்*
*சென்னை - 1*

*3. தமிழண்ணல்* — *தொல்காப்பியம், பொருளதிகாரம்*
*தொகுதி – 1, முதற்பதிப்பு 2006*
*மணிவாசகர் பதிப்பகம்.*
*31, சிங்கார் தெரு, பாரிநிலையம்*
*சென்னை - 1*

*4. சா.வே.சுப்பிரமணியன்* — *சங்க இலக்கியம்*
*எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும்*
*(நற்றிணை) தொகுதி -1 முதற்பதிப்பு 2010*
*மணிவாசகர் பதிப்பகம்.*
*31, சிங்கார் தெரு, பாரிநிலையம்*
*சென்னை – 1*


********* ********* ********** ********* ********* ********** ********** **********